**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்**

**முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ) ஓமலூர்,

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 133/2023**

CNR.No: TNSA100008662023

**வழக்கின் சுருக்கம்**

| **வ. எண்** | **விவரம்** | **உள்ளடக்கம்** |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், தாரமங்கலம் காவல் நிலையம் குற்ற எண்.242/2022 இதச பிரிவுகள் 294(b), 323 |
| 2. | எதிரிகளின் விவரம் | A1) திரு.கார்த்திக் (33/2026), (கூலி),<br>த/பெ.அழகுராஜ்,<br>கசப்பெறி,<br>பாப்பம்பாடி கிராமம்,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.<br>A2) திரு.குமரேசன், (32/2026), (கூலி),<br>த/பெ.நல்லதம்பி,<br>கசப்பெறி,<br>பாப்பம்பாடி கிராமம்,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம். |
| 3. | குற்றச்சம்பவம் நிகழ்ந்த நாள் | 24.04.2022 |
| 4. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 18.04.2023 |
| 5. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தேதி | 31.05.2023 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | A1, A2 – 04.05.2022ம் தேதி எதிரிகளை கைது செய்துள்ளார்கள் |



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:13:45 +0530

| | | |
|---|---|---|
| 7. | பிணையில் வெளிவந்த நாள் | A1, A2 – 04.05.2022 ம் தேதி நிலைய பிணையில் வெளி வந்துள்ளார்கள். |
| 8. | விசாரணையின் தொடக்கம் | 27.07.2023 |
| 9. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் விபரங்கள் | A1)கார்த்திக் மற்றும் A2)குமரேசன் – இதச பிரிவுகள் 294(b), 323 |
| 10. | விசாரணை முடிவு | 20.07.2026 |
| 11. | தீர்ப்பு விவரம் | குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் A1) கார்த்திக் மற்றும் A2) குமரேசன் என்பவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 323–ன் கீழ் குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரிகள் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 1973 பிரிவு 248(1)–ன் கீழ் **விடுதலை செய்து** தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் முன்பு வழங்கியிருந்த பிணைப்பத்திரம் (Bond) ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 437(A)–ன் கீழ் புதிய பிணைப்பத்திரத்தை எதிரி நிறைவேற்ற வேண்டும். அந்தப் பிணைப்பத்திரம் 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும். |
| 12. | வழக்கின் சொத்துகள் | இவ்வழக்கில் இரு தரப்பினராலும் எந்தப் பொருளும் (Property/Material Object) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 452–ன் கீழ் சொத்து அல்லது பொருள் தொடர்பாக எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. |



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:13:50 +0530

| | | |
|---|---|---|
| 13. | தீர்ப்பு | தீர்ப்பு உடனடியாக இ-கோர்ட் (e-courts) இணையதளத்தில் பதிவேற்றப்படுகிறது |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | காலதாமதம் இல்லை |

இவ்வழக்கானது, கடந்த 01.06.2023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் திரு.M.சுரேஷ் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாலு அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## தீர்ப்புரை

### வழக்கின் சுருக்கம்:

1) சேலம் மாவட்டம், தாரமங்கலம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், 24.04.2022ம் தேதி இரவு 07.00 மணி சுமாருக்கு சாட்சி-1 சண்முகம் என்பவர் கசப்பேரியில் உள்ள அவரது வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் வந்து கார்த்திக் சாட்சி-1 சண்முகம் என்பவரை பார்த்து எதுக்குடா "தேவடியா பையா" என் அப்பாவை போன்பன்னி திட்ர என்று திட்டியும், சாட்சி-1 சண்முகம் என்பவரை 1வது எதிரி கார்த்திக் கையால் முதுகின் மீது அடித்தும், 2வது எதிரி குமரேசன் என்பவர் காலால் உதைத்தும் காயத்தை ஏற்றபடுத்தியுள்ளனர். எனவே எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, கீழ் தாரமங்கலம் காவல் உதவி ஆய்வாளரால் இறுதியறிக்கை தாக்கல் செய்து, அவ்வாறே வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:13:53 +0530

**<u>நீதிமன்றம் பின்பற்றிய வலியுறுத்து சட்ட வகையங்கள்:</u>**

2) இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்ற விசாரணை முறைமைச் சட்டம் பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கிற்கான ஆரம்ப முகாந்திரம் இருந்த காரணத்தினால்,

| எதிரிகள் | இதச பிரிவுகள் |
|---|---|
| A1) கார்த்திக் மற்றும் A2) குமரேசன் | இதச பிரிவுகள் 294(b), 323 |

3) எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வரைந்து, எதிரிகளிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தான் குற்றவாளி அல்ல என மறுத்துரைத்துள்ளார்கள். எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய வழிவகை செய்யப்பட்டது.

**<u>எதிரிகள் மீதான வழக்கினை மெய்ப்பிக்கும் பொருட்டு:</u>**

4) அரசு தரப்பில், அ.சா.1 பவித்ரன், அ.சா.2 செல்லம்மாள், அ.சா.3 சக்தி மற்றும் அ.சா.4 கோவிந்தாஜ் ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:</u>**

5) **அ.சா.1 பவித்ரன் என்பவர் புகார்தாரர் சண்முகம் வீட்டின் அருகில் குடியிருந்தவர் ஆவார்:** தான் கசப்பேரியில் குடியிருந்து விசைத்தறி தொழில் செய்து வருவதாகவும், அவர் தற்போது இறந்துவிட்டார் என்றும், 2022 ம் ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு 07.00 மணியளவில் இறந்துபோன சண்முகம் என்பவருக்கும், கார்த்திக் மற்றும் குமரேசன் ஆகியோருக்குமிடையே தகராறு நடந்தது என்றும், குமரேசன் மற்றும் கார்த்தி இருவரும் சண்முகத்தை அடித்தார்கள் என்றும், சண்முகம் வீட்டில் மேற்படி சம்பவம் நடந்தது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி 16.07.2026 ம் தேதி சாட்சி மனுவின் பேரில்



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:13:57 +0530

அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்தபோது சம்பவத்தில் யார் ஈடுபட்டார்கள் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும், சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார்.

6) **அ.சா.2 திருமதி. செல்லம்மாள் என்பவர் புகார்தாரர் சண்முகம் என்பவரின் மனைவி ஆவார்:** தான் கசப்பேரியில் குடியிருந்து தனியார் பள்ளிக்கு ஆயா வேலை செய்து வருவதாகவும், அவர் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், 2022ம் ஆண்டு ஒரு நாள் தான் மில்லில் வேலை செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது தான் ஒரு நாள் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது தன் கணவர் சண்முகம் தன்னிடம் எதிரிகள் குமரேசன் மற்றும் கார்த்திக் இருவரும் தங்கள் வீட்டை அடித்த உதைத்து தன் கணவரையும் அடித்துவிட்டதாக கூறி, அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துமனைக்கு அழைத்து போக சொன்னதாகவும், தான் ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்தேன் என்றும், அங்கு அவர் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி 20.07.2026 சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்தபோது தான் நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார்.

7) **அ.சா.3 திரு.சக்தி ஆவார்** : தான் கசப்பேரியில் குடியிருந்து விசைத்தறி வேலை செய்து வருகிறேன் என்றும், இவ்வழக்கின் புகார்தாரர் சண்முகன் என்பவர் தனது மாமா என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், தற்போது **அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் (Hostile Witness)** அளித்துள்ளார். குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்கவில்லை.



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:14:01 +0530

8) **அ.சா.4 திரு. கோவிந்தராஜ் (புலன்விசாரணை அதிகாரி):** தான் தற்போது தாரமங்கலம் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், 27.04.2022 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த திரு.கோவிந்தன் என்பவரது கையெழுத்து ஆவணங்களின் அடிப்படையில் தனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்தும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்தும், பார்வை மகஜர் அ.சா.3 ஆக குறியீடு செய்தும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்தும், சண்முகம் என்பவருக்கு ஓமலூர் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்தும், மேல் சிகிச்சை பெற சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபத்து பதிவேட்டின் பின்னால் வழங்கப்பட்டுள்ள காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்தும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்தும், பின்பு எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(b)–ன் கீழான நடவடிக்கைகள்:</u>**

9) அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து, எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளைத் தனியே தொகுத்து, அதைப் பற்றி குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் எதிரிகளுக்கு எடுத்துக்கூறி வினவ, எதிரிகள் அவற்றை பொய்ச்சாட்சிகள் என மறுத்தும், தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை எனவும் பதில் அளித்துள்ளனர்.

**<u>தீர்வு காண வேண்டிய விவாத வினாக்கள்:</u>**

10) தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கானது, தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால், சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால்



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:14:04 +0530

நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**தீர்வு:**

11) அரசு தரப்பு வழக்கானது, எதிரிகள் வாதியை அசிங்கமாகப் பேசி, அடித்து காயத்தினை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதேயாகும்.

12) அ.சா.1 திரு.பவித்ரன் என்பவரின் விசாரணையில், 2022ம் ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு 07.00 மணியளவில் இவ்வழக்கில் இறந்துபோன சாட்சி சண்முகம் என்பவருக்கும், எதிரிகள் கார்த்திக் மற்றும் குமரேசன் ஆகியோர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டு சாட்சி சண்முகத்தை அடித்தார்கள் என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி குறுக்கு விசாரணை செய்தபோது சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவத்தில் யார் ஈடுபட்டார்கள் என்ற விபரம் தெரியாது என்று கூறியுள்ளார்.

13) அ.சா.2 செல்லம்மாள் என்பவரின் விசாரணையில் இவ்வழக்கின் புகார்தாரர் சண்முகம் தனது கணவர் என்றும், கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், 2022ம் ஆண்டு ஒரு நாள் தான் மில்லில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றும், அப்போது தான் ஒரு நாள் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது தன் கண்வர் சண்முகம் தன்னிடம் எதிரிகள் குமரேசன் மற்றும் கார்த்திக் இருவரும் தங்கள் வீட்டை அடித்த உடைத்தம், தன் கணவரையும் அடித்துவிட்டதாக கூறி, அவரை ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்தேன் என்றும், அங்கு அவர் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணை செய்தபோது சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று தெரியாது என்று கூறியுள்ளார்.

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:14:08 +0530

**14)** அ.சா.3 சக்தி என்பவரின் விசாரணையில் புகார்தாரர் சண்முகம் என்பவர் தனது மாமா என்றும், எதிரிகளை தெரியும் என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், **அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் (Hostile Witness)** அளித்துள்ளார். குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்கவில்லை.

15) மேலும் புகார்தாரரான அ.சா.1 பவித்ரன், அ.சா.2 செல்லம்மாள் மற்றும் அ.சா.3 சக்தி சாட்சியம் இவ்வாறாக உள்ள நிலையில், புலன் விசாரணை தொடர்பாக அளிக்கப்பட்ட அ.சா.4 கோவிந்தராஜ் என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகளை மீதான வழக்கினைத் தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) மேற்கண்ட சூழ்நிலைகளும், அ.சா.1 பவித்ரன், அ.சா.2 செல்லம்மாள், அ.சா.3 சக்தி என்பவர்களின் சாட்சியமும், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்குச் சாதகமாக்கி, அவர்களை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து, மேற்கண்ட பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

**<u>முடிவு:</u>**

17) குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் A1) கார்த்திக் மற்றும் A2) குமரேசன் என்பவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 323-ன் கீழ் குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரிகள் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 1973 பிரிவு 248(1)-ன் கீழ் **விடுதலை செய்து** தீர்ப்பளிக்கப்படுகிறது.

18) குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் முன்பு வழங்கியிருந்த பிணைப்பத்திரம் (Bond) ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில்



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:14:11 +0530

ஆஜராகுவதற்காக, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 437(A)–ன் கீழ் புதிய பிணைப்பத்திரத்தை எதிரிகள் நிறைவேற்ற வேண்டும். அந்தப் பிணைப்பத்திரம் 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

19) இவ்வழக்கில் இரு தரப்பினராலும் எந்தப் பொருளும் (Property/Material Object) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973–ன் பிரிவு 452–ன் கீழ் சொத்து அல்லது பொருள் தொடர்பாக எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:14:15 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
ஓமலூர்.

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–**

| வரிசை எண். | சாட்சிகள் | சாட்சிகளின் பெயர்கள் | விசாரணை செய்த நாள் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.ச.பவித்ரன் | 24.02.2026 |
| 2. | அ.சா.2 | திருமதி.ச.செல்லம்மாள் | 24.02.2026 |
| 3. | அ.சா.3 | திரு.ச.சக்தி | 05.03.2026 |
| 4. | அ.சா.4 | திரு.கோவிந்தராஜ் | 20.07.2026 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| வரிசை எண். | குறியீடு | குறியீடு செய்யப்பட்ட தேதி | அரசு தரப்பு சான்றாவணங்கள் | குறியீடு செய்யப்பட்ட சாட்சி |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 27.04.2022 | புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது | அ.சா.4 |
| 2. | அ.சா.ஆ.2 | 27.04.2022 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| 3. | அ.சா.ஆ.3 | 27.04.2022 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 4. | அ.சா.ஆ.4 | 27.04.2022 | மாதிரிவரைபடம் | அ.சா.4 |
| 5. | அ.சா.ஆ.5 | 25.04.2022 | சண்முகம் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ஓமலூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது | அ.சா.4 |
| 6. | அ.சா.ஆ.6 | 25.04.2022 | சண்முகம் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று சேலம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது | அ.சா.4 |
| 7. | அ.சா.ஆ.7 | 27.04.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.4 |



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:14:19 +0530

எதிரிகள் தரப்பு சாட்சிகள்:– இல்லை
எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை
எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.
3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.14 17:14:22 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
ஓமலூர்.

**வழக்கு சுருக்கம்**

<table>
<tr><td>1.</td><td>எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>2.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">18.04.2023</td></tr>
<tr><td>3.</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு (Sessions Court) ஒப்படைக்கப்பட்ட தேதி</td><td colspan="3">பொருந்தாது</td></tr>
<tr><td>4.</td><td>குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள்</td><td colspan="3">25.10.2024</td></tr>
<tr><td rowspan="3">5.</td><td rowspan="3">தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td>CMP. No.</td><td>Petition</td><td>Result</td></tr>
<tr><td>2654/2026</td><td>Petition u/s.348 of BNSS</td><td>Allowed</td></tr>
<tr><td>2708/2026</td><td>Petition u/s.348 of BNSS</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="5">6.</td><td rowspan="5">சாட்சிகள் விசாரணை</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>P.W.1</td><td>24.02.2026</td><td>16.07.2026</td></tr>
<tr><td>P.W.2</td><td>24.02.2026</td><td>20.07.2026</td></tr>
<tr><td>P.W.3</td><td>05.03.2026</td><td>Hostile</td></tr>
<tr><td>P.W.4</td><td>20.07.2026</td><td>20.07.2026</td></tr>
<tr><td>7.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313–ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">20.07.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>9.</td><td>மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள்</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

SADHAMHUSAIN S Digitally signed by SADHAMHUSAIN S Date: 2026.08.14 17:14:26 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
ஓமலூர்